# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 49வது கூட்டறிக்கை 2022.03.15

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 49வது அமர்வு 2022.03.15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம்.நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 10. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதீ.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 19. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 20. திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 49வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களே, இன்று நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியினால் சபை நடவடிக்கைகளுக்கு பாரிய சவாலாக மாறியுள்ளது. நாம் உருவாக்கிய வரவு செலவுத் திட்டத்தினை விட அரசாங்கத்தினால் சகல அரச ஊழியர்களுக்கும் ரூபா 5000.00 கொடுப்பனவு கொடுப்பதனால் இந்த வருடத்திற்கு மதிப்பிட்டதை விட 5.1 மில்லியன் மேலதிகமாக தேவைப்படுகின்றது. அதற்கு

அப்பால் தற்பொழுது நடந்திருக்கும் எரிபொருள் விலை உயர்வினால் ஏறத்தாள 2.3 மில்லியன் மேலதிகமாக தேவைப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. மொத்தமாக 7.5 மில்லியன் செலவீனம் நாளாந்த நடவடிக்கைகளுக்காக தேவைப்படுகின்றது. அப்படியானால் வருமானமும் குறைந்து வரும் வேளையில் இந்த செலவீனம் கூடுவது என்பது எந்தவொரு அபிவிருத்தி வேலையையும் செய்ய முடியாத நிலையை உருவாக்குகின்றது. இதை கருத்திற் கொண்டு நமது சபை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதாக இருக்கின்றது.

அதற்கு மேலாக அரசு இரவு வேளைகளில் வீதி லாம்புகள் சகலதும் அணைக்கப்பட வேண்டும் என்ற ஒரு கட்டளைக்கமைவாக நமது ஊரில் அது செயற்படுத்தப்படுகின்றது. இதனால் பல அசௌகரியங்கள் ஏற்படுகின்றது. இதற்கு விதி விலக்கு எதுவும் அரசு அவர்களின் கட்டளையில் தரவில்லை. அப்படி நமக்கு நடைமுறை பிரச்சினை இருக்குமானால் அதை அரசின் கவனத்திற்கு எடுத்துக் கொண்டு செல்ல வேண்டிய நிலைப்பாடு இருக்கின்றது.

சென்ற கிழமை அட்டாளைச்சேனை பிரதேச சபை எல்லைக்குள் முல்லிக்குளம் என்ற இடத்தில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்று இனங்காணப்பட்டு இருந்த இடத்தில் பௌத்த பிக்குகள் பாதுகாவலர்களோடு வந்து ஒரு கட்டுமான வேலையை செய்ய முயன்ற போது அந்தப் பகுதி மக்கள் பிரதிநிதிகள் ஒன்றுகூடி அதை தடுத்து நிறுத்தி நீங்கள் எது செய்வதானாலும் அதை சட்டபூர்வமாக செய்ய வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் அவர்கள் அதை சட்டபூர்வமான ஆணையை எடுத்துக் கொண்டு வருகின்றோம் என்று கூறி அவ்விடத்தில் இருந்து சென்றிருக்கின்றார்கள்.

இதே பிரச்சினை நமது எல்லைக்குள்ளும் வரமுடியும். இன்றுவரை சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குள் 11 இடங்கள் இனங்காணப்பட்டு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த இடங்களில் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அத்துமீறி ஏதாவது தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்தை தவிர வேறு ஏதாவது செய்ய முற்பட்டால் அதை தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு நமக்கு வரும். சட்டப்படி இனங்காணப்பட்டிருக்கின்ற இடத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்தினால் பிரதேச செயலகத்திற்கு அறிவித்து சபைக்கு அறிவித்துதான் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர பௌத்த பிக்குகள் வந்து செய்ய இயலாது. இந்த விடயங்களில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

அடுத்தது மாண்புமிகு பிரதம மந்திரியின் கூற்றுப்படி 7,8ம் மாதத்திற்கு முதல் தேர்தல் நடாத்தக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்ற போது சபை கலைவதற்கு முன் செயலாளரோடு சேர்ந்து செயற்படக்கூடிய ஒரு ஆலோசணைக்குழு ஒன்று உருவாக்குவது நல்லது. நாம் இல்லாத இடத்தில் செயலாளருக்கு சட்டபூர்வமாக இந்த சபை உருவாக்கிய குழுவாக இருந்து இயங்கக்கூடியதாக, கடந்தகால நடவடிக்கைகளை வைத்து பங்களித்தவர்கள் என்ற சார்பில் 16 பேரின் பெயர் இனங்காணப்பட்டுள்ளது. ஒரு வகையில் நமக்கு பாக்கியம் அந்தக் குழுவில் துறையில் அனுபவம் உள்ளவர்கள் பலர் இருக்கின்றார்கள். இதற்கு மேலாக இவர்களோடு சேர்ந்து செய்யக்கூடியவர்கள் இருக்குமானால் நீங்கள் செயலாளருக்கு முன்மொழிந்து அவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

அடுத்ததாக சென்ற மாதத்தின் செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம். இல்லாவிடில் அதனை ஆமோதிக்கலாம்.

### தீர்மானம் - 04/49/01

சென்ற மாதம் 2022.02.01 தொடக்கம் 2022.02.28 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.எம்.சஹீல் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/49/02**

நிதி தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்காக நிதி விடயத்துடனும், உள்ளூராட்சி மன்ற விடயங்களுடனும் பரீட்சியமான குழு ஒன்றினைத் தாபிப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/49/03**

அமீர் அலி பொது நூலகத்தின் மின்சாரம், நீர் விநியோகத்தால் தற்போதுள்ள அமீர் அலி சிறுவர் பூங்காவுக்கென தனியான நீரிணைப்பு, மின் இணைப்பு பெறுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/49/04**

சம்மாந்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான வாகனங்கள், இயந்திரோபகரணங்களை வாடகைக்கு வழங்குவது தொடர்பாக அட்டவணை I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட பல்வேறு வாகனங்கள், இயந்திரோபகரணங்களுக்காக II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட கட்டணத்தை 2022 ஆம் வருடத்திற்காக நிர்ணயம் செய்து அறவீடு செய்வதற்கான பிரேரணை.

**அட்டவணை – 01**

| **நிரல் I**<br>**விபரம்** | **நிரல் II**<br>**கட்டணம் (ரூபா)** |
|---|---|
| 1. மோட்டார் கிரேடர் | ஒரு மணித்தியாலயத்திற்கு 4,600.00 |
| 2. JCB – Backhoe Loader | ஒரு மணித்தியாலயத்திற்கு 4,000.00 |
| 3. Roller வாடகை | |
| I. 01 Ton Roller | முதல் 04 மணித்தியாலயத்திற்கு 16,000.00 ரூபா<br>மேலதிக ஒவ்வொரு மணித்தியாலயத்திற்கும் 4,000.00 ரூபா வீதம் அறவிடப்படும் |
| II. 03 Ton Roller | முதல் 04 மணித்தியாலயத்திற்கு 16,000.00 ரூபா<br>மேலதிக ஒவ்வொரு மணித்தியாலயத்திற்கும் 3,000.00 ரூபா வீதம் அறவிடப்படும் |
| 4. ஜனாஸா வாகனம் | 01 KM இற்கு 20.00<br>(பிரதேச சபை எல்லைக்கு அப்பால்) |
| 5. தண்ணீர் பவுஸர் | |
| I. 8000 லீற்றர் | 6000.00 |
| II. 6000 லீற்றர் | 5000.00 |
| III. 4000 லீற்றர் | 3000.00 |

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/49/05**

ZB – 0356 Compacter கிளச் பகுதி, RB – 0639 உழவு இயந்திரம், RA – 2466 உழவு இயந்திரம் போன்றவைகளுக்கு இன்ஜின், கிளச் பகுதி மற்றும் JCB Overall திருத்தம் செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/49/06**

இறக்காமம் பிரதேச சபை டம்ரக் இயந்திரத்தின் ஒப்பந்த காலத்தினை மேலும் ஒரு வருடம் நீடிப்பதற்கும், அவ் இயந்திரத்திற்கு டயர்கள் மாற்றுவதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/49/07**

LDSP வேலைத்திட்டம் - 2022 இல் Night Soil Treatment 4ம் கட்டத்திலும், மல்வத்தையில் Culture Hall 5ம் கட்டத்திலும் மேற்கொள்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சபைக்கு கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் முன்வைத்த சம்மாந்துறை மலையடிக்கிராமம் - 01 இல் நூலகம் அமைப்பது தொடர்பாக, அந்தப் பகுதியில் நமக்கு ஒரு வாசிப்பு நிலையமோ, நூலகமோ இல்லை. அதனால் கிளினிக் சென்டரினை சபையின் பராமரிப்பின் கீழ் எடுத்து வாசிப்பு நிலையமாக பாவிக்க வேண்டும். MOH இற்கு தேவைப்படுகின்ற நாளைக்கு அதனை விடுவிக்கலாம். இதில் ஒரு சிக்கல் வரும் என்னவென்றால் நம்மிடம் ஊழியர்கள் இல்லை. அதை சனசமூக நிலையம் மூலமாக செய்வதா? அல்லது பட்டதாரி நியமனங்கள் வந்தால் அதில் ஒருவரை அங்கு மேற்பார்வை செய்வதற்கு நியமிப்பதா? MOH இற்கு எழுத்து மூலம் அறிவித்து நமது பராமரிப்பின் கீழ் கொண்டு வந்து அதை ஒரு வாசிப்பு நிலையமாக பராமரிப்பதற்கு இந்த சபையின் அனுமதியை கோருகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, வாசிப்பு நிலையம் என்பது நூலகமா? வாசிப்பு நிலையமா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நூலகமாக்குவதற்கு நமது சொந்த இடமாக இருக்க வேண்டும். இன்றைக்கு சென்னல் கிராமத்தில் செயற்படுவதும் வாசிப்பு நிலையம். வாசிப்பு நிலையத்தில் இருந்துதான் நூலகமாக மாற வேண்டும்.

அவ் இடத்தில் ஏழைப் பிள்ளைகளுக்கு படிப்பதற்கு ஒரு இடம் வேண்டும். எல்லா நூலகங்களையும் கூடுதலாக பாவிப்பது வாசிப்பு நிலையமாகத்தான். வாசிப்பு நிலையமாக ஆரம்பித்தால் அது காலப்போக்கில் நூலகமாக மாறும்.

### தீர்மானம் - 04/49/08

மலையடிக்கிராமம் - 01 இல் அமைந்துள்ள கிளினிக் சென்டரினை எமது சபையின் கீழ் எடுத்து பராமரிப்பதற்கும், அதில் ஒரு வாசிப்பு நிலையத்தினை அமைப்பதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, யூ.எல்.எம் முகைடீன் பொது நூலகத்தில் இடம் பற்றாக்குறை என்று மக்கள் கூறுவதால் அந்த இடத்தை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாங்களும் முயற்சி செய்கின்றோம். அதில் நேற்று ஒரு தகவல் சபூர்சனச அந்த இடத்தை ஒரு Montessori நடத்துவதற்கு ஒதுக்கப்பட்டது. ஆனால் அது நடைபெறவில்லை. அதனால் அதை மீளப் பெறக்கூடிய ஒரு சந்தர்ப்பம் இருக்கின்றது. முழுக் கட்டடத்தையும் எடுத்தால் எல்லாம் செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாம் Co - operative வளவை கேட்டுப் பார்க்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Co - operative இடமும் கேட்டோம். அரச காணியாக இருந்தாலும் அவர்களின் இருப்பில் இருக்கின்றது. வர்த்தக கட்டடம் ஒன்று கட்டுவதற்காக முயற்சிகள் எடுக்கின்றார்கள். நாம் உத்தியோகபூர்வமாக பிரதேச செயலாளரிடம் கேட்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வாசிப்பு நிலையம் ஏற்படுத்துகின்ற போது எமது சபையின் பராமரிப்பில் உள்ள சென்னல் கிராமம் - 02ம் பிரிவில் உள்ள பாத்திமா பாலர் பாடசாலையின் வளாகத்தில் இருக்கின்ற பெறுமதியான கட்டிடம் பாழடைந்து செல்கின்றது. ஆகவே அப் பிரதேசத்தில் இருக்கின்ற முக்கியமான ஒரு தேவை வாசிப்பு நிலையம். அதே போன்று கணனிப் பயிற்சி பெறக்கூடிய சந்தர்ப்பத்தினை அவ்விடத்திலே ஏற்படுத்த வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதை ஒரு தீர்மானமாக எடுப்போம். UNDP இடம் கேட்போம்.

### தீர்மானம் - 04/49/09

எமது சபையின் பராமரிப்பில் உள்ள பாத்திமா பாலர் பாடசாலை வளாகத்தில் இருக்கின்ற கட்டிடத்தில் வாசிப்பு நிலையம் ஒன்றினை அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
திறந்தவெளி பொதுச் சந்தையின் இந்த வருடத்தின் குத்தகை ரூபா 8,010,000.00 சென்ற வருடம் ரூபா 8,010,000.00 அதற்கு முந்திய வருடம் ரூபா 7,050,000.00 அவரின் கேள்வி இதை செய்ய இயலாது இரத்துச் செய்யுங்கள் என்று, திறந்தவெளி ஒப்பந்தத்தினை இரண்டுபேரும் இணங்கி இரத்துச் செய்யவேண்டும். அல்லது அதை செயற்படுத்தக் கூடியதாக வர வேண்டும். இது நமது வருமானத்தில் பெரிய பங்கு. இதை நாம் விட்டுக் கொடுக்கவும் இயலாது. நாம் அறவிடவும் இயலாது. யதார்த்தம் இதுதான். இப்படியான நேரங்களில் இந்த குறைப்பை நாம் செய்ய இயலாது. ஆளுநர்தான் செய்யலாம். நாம் முன்மொழியலாம். நான் 05 வருடத்தின் சராசரியை பார்த்தவுடன் 7,310,000.00 அது ஏறத்தாள இந்த வருடத்தின் தொகையில் இருந்து 8% கழிவு. என்னுடைய சிபார்சு 8% கழிவு கொடுத்தால் 7,370,000.00 ரூபா வரும். அத்துடன் நாம் தற்போது அறவிடுகின்ற வரிகளிலும் ஒரு மாற்றத்தை செய்து நாம் சிபார்சு செய்து இதை தொடர வேண்டும் என்பது எனது கருத்து. அதில் மாற்றுக் கருத்துக்கள் இருக்குமானால் கூறலாம்.

**தீர்மானம் - 04/49/10**
2022ம் ஆண்டு திறந்தவெளி பொதுச் சந்தையினை குத்தகைக்கு பெற்றவருக்கு இந்த வருடத்தின் குத்தகை தொகையில் இருந்து 8% கழிவு வழங்குவதற்கு ஆளுநருக்கு சிபார்சு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/49/11**
பிரதான அலுவலகம் (100KVA), அப்துல் மஜீட் மண்டபம் (30KVA), ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத் தொகுதி (30KVA) ஆகியவற்றிலுள்ள Generator களுக்கு புதிதாக 2022 வருடாந்த Service/Service Agreement மேற்கொள்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நேற்று நமது கௌரவ உறுப்பினர் நஜீம் அவர்கள் முக்கியமான ஒரு விடயத்தைப் பற்றி பேசினார். இந்த ஊரில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. இதற்கு மட்டக்களப்பில் Rehabilitation Center என்ற ஒரு இடம் இருக்கின்றது. நமக்கு என்று நமது ஊரிலும் அப்படியான ஒரு Center உருவாக்குவதற்கு நாமும் முயற்சி எடுத்தால் என்ன? என்னைப் பொருத்தவரைக்கும் மிகவும் காலத்திற்கு தேவையான ஒன்று. நான் 02 இடங்களை இனங்கண்டேன். ஒன்று சென்ஜோன் அம்பியுலன்ஸ் கட்டிடம், அடுத்தது Pensioners Association. நான் சென்ஜோன் அம்பியுலன்ஸ் உடன் கதைத்தேன். அவர்கள் எம்மோடு சேர்ந்து இயக்குவதற்கு தயார். நாம் பிரதேச செயலகம், MOH, நம்பிக்கையாளர் சபை, பிரதேச சபை இணைந்து ஒரு கூட்டு முயற்சியாக அந்த நிலையத்தினை உருவாக்க வேண்டும். அந்த முயற்சி எடுப்பதற்கு சபையின் தீர்மானம் இருக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, போதைக்கு அடிமைப்பட்ட பிள்ளைகளை எப்படி பாதுகாப்பது? எங்கு சென்று திருத்திக் கொள்ளலாம் என்ற வழி தெரியாமல் பெற்றோர்கள் இருக்கின்றார்கள். அதனால் எமது ஊரில் இப்படியான ஒன்றை நிறுவுவது நல்லது என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, போதைக்கு அடிமைப்பட்டவர்கள் அதிகமானவர்கள் இருக்கின்றார்கள். இரவு 08 மணிக்கு பின்னர் எனது வீதிக்கு அடுத்த வீதியில் 100, 150 பிள்ளைகள் இதற்கு அடிமைப்பட்டு இருக்கின்றார்கள். கட்டாயம் இது வரவேற்கத்தக்க விடயம். இதை செயற்படுத்த வேண்டும்.

**தீர்மானம் - 04/49/12**
பிரதேச செயலாளர், சுகாதார வைத்திய அதிகாரி, நம்பிக்கையாளர் சபை, பிரதேச சபை இணைந்து போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானோர்களுக்கான புணர்வாழ்வு நிலையத்தினை சென்ஜோன் அம்பியூலன்ஸ் கட்டிடத்தில் அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.நஜீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, போதைப்பொருள் சம்மந்தமாக முதல் சிவில் ஆராய்ச்சி குழு உருவாகி ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் நியமித்தார்கள். தற்போது பொதுமக்கள் பாதுகாப்பு என்று புதிய மாற்றத்தோடு உருவாகி இருக்கின்றது. இதில் அவர்கள் களவுகளைப் பற்றி பேசினார்கள். நான் சொன்னேன் நாம் செய்ய வேண்டியது போதைப்பொருள். சம்மாந்துறை – 07 ஐ பொருத்தவரையில் குறைவு. ஆனால் நீங்கள் சொன்ன பிரதேசத்தில் கூடுதலாக இருக்கின்றது. மிக முக்கியமான விடயம் பிள்ளைகள் கூடுதலாக நானும் சமாதானக் கல்வி என்ற வகையில் ஒவ்வொரு இடத்திலும் அவர்களையும் சேர்த்து பாடங்களை நடாத்திய வகையில் நான் கண்ட அனுபவம் ஒன்று வீட்டுச் சூழல். சிலர் 02 இற்கு மேற்பட்ட திருமணங்கள் முடிக்கின்றார்கள். சிலர் வெளிநாடு செல்கின்றார்கள். இதனால் அவர்கள் அவர்களுக்கு சாதகமாக செல்கின்றார்கள்.

சிவில் ஆராய்சி குழு மாதிரி OIC யிடமும், கிராம சேவகர்களிடமும் கதைத்து பொது மக்கள் பாதுகாப்பு குழு என்று அந்தந்த பிரதேசத்தில் உள்ளவர்களை போடுவது. அந்தந்த பிரதேசத்தில் உள்ளவர்கள் தகவல் வழங்க வேண்டும். அத்துடன் போதைப்பொருள் பாவிக்கின்ற பிள்ளைகளுக்கு மாற்றுத்திட்டங்கள் அமைப்பதற்கு நமது ஊரில் அதிகளவான வங்கிகள் இருக்கின்றது. அவர்கள் அதிகளவான உதவிகள் செய்யலாம். அவர்கள் செய்கின்ற உதவிகள் கல்விக்காக இருக்க வேண்டும். கல்வியில் விடுபட்ட பிள்ளைகள்தான் இதில் முக்கியமாக இருக்கின்றது. சில பிள்ளைகள் O/L இல் சித்தியடையாவிட்டால் கல்வியே இல்லை என்று நினைக்கின்றார்கள். ஆனால் O/L, தரம் 08 படித்தவர்களுக்கும் தொடர் கல்வியை தொடரக்கூடிய வாய்ப்பு சம்மாந்துறையில் இருக்கின்றது. SLIATE, VTC, Technical College, Science Faculty இருக்கின்றது. இவைகளை உள்வாங்குவதில்லை.

அடுத்தது மதரசாக்களை இயக்குகின்றவர்கள் நாம் கதைத்து சில மாற்றங்கள் வந்திருக்கின்றது. ஆயிஷா சித்தீக்கா மதரசாவுக்கு எத்தனையோ பேர் செல்கின்றார்கள். இங்கு பெரிய வளமான இடங்கள் இருக்கின்றது. உலகக் கல்வியையும், மார்க்கக் கல்வியையும் ஒன்றாக போதித்து அவர்களுக்கு என்று ஒரு எதிர்காலத்தை உருவாக்குகின்ற திட்டத்தை இன்னும் கொண்டுவரவில்லை. உதாரணத்திற்கு Research Center ஒன்று இருப்பதை சொல்வதற்கு வெட்கமாக இருக்கின்றது. சம்மாந்துறை என்ற நெல்லை இதுவரைக்கும் கண்டுபிடிக்கவில்லை. சந்தோசமான விடயம் புற்றுநோய் வைத்தியசாலையை நீங்கள் குறிப்பிட்டு சொன்னீர்கள். எங்கு சம்மாந்துறையில் இப்படியான வைத்தியசாலை இருக்கின்றது. சம்மாந்துறையின் வளத்தை வைத்து எப்படி செய்ய வேண்டும் என்ற ஒரு தொழிற்சாலை கூட இல்லை. நமக்கு அகௌரவம் நிந்தவூரில் எத்தனையோ தொழிற்சாலைகள் இருக்கின்றது. நாம் இருப்பது நீடிக்கப்பட்ட காலம். இதில் சில விடயங்களை சபை தீர்மானித்து எப்படி செய்ய வேண்டும் என்று சம்மாந்துறைக்கு என்ற முழுமையான திட்டத்தை

உருவாக்க வேண்டும். சம்மாந்துறை அபிவிருத்தி திட்டத்திற்கான சகல இன மக்களும் உள்வாங்கப்பட்டு நமது பிரதேசங்களை தொகுத்து எந்தப் பிரதேசத்தில் என்ன செய்ய வேண்டும் என்று ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும். நாம் சென்றாலும் வருகின்றவர்கள் இதை கொண்டு செல்ல வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் சிந்திக்க வேண்டும். இது அதிகாரம் அளிக்கப்பட்ட உயர் சபை நாம் செய்ய இயலாது என்றால் அதிகாரம் அற்றவர்கள் எப்படி செய்வது. எமது சபையில் அனுபவம் வாய்ந்த தவிசாளர் இருக்கின்றீர்கள், வெளிநாட்டில் இருந்து பல உதவிகளை கொண்டு வந்த கௌரவ உறுப்பினர் இருக்கின்றார். ஒரு சிரேஷ்ட சட்டத்தரணி இருக்கின்றார். நீர் வழங்கல் சம்மந்தாமக செல்வது என்றால் அதற்கு கௌரவ உறுப்பினர் இருக்கின்றார். இவைகளை ஒன்று திரட்டி சம்மாந்துறை எழுச்சித் திட்டம் என்று ஒரு திட்டத்தை முன்வைக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த விடயத்தில் நானும் ஒன்றைக் கூற வேண்டும். ஆயிஷா சித்தீக்கா என்ற இடத்திற்கு எமது பெண்கள் பணத்தை கொடுத்துச் செல்கின்றார்கள். சென்னல் கிராமத்தில் அஸ்ஸாலிஹாத் மத்ரசா இயங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த இடத்தை தனிநபராக பயன்படுத்துகின்றார்கள். அந்த இடம் பொது இடம். எனது தந்தையும் ஒரு ஏக்கர் காணியை பொது இடம் என்றுதான் ஒதுக்கி கொடுத்திருக்கின்றார். தனி இடம் என்று இல்லாமல் பொது இடமாக எடுத்து ஆயிஷா சித்தீக்கா போன்ற கல்விக் கூடமாக அமைத்தால் நன்றாக இருக்கும். கௌரவ உப தவிசாளர் சொன்னது போன்று பெரிய பிரதேசமான சம்மாந்துறை இலங்கையில் பிரதேச செயலக மட்டத்தில் 2ம் இடத்தில் இருக்கின்றது. ஆனால் சிறு ஊரிலே சகல காரியங்களையும் தேடி எமது ஊர் மக்கள் செல்கின்றார்கள். இதை நாங்கள் வழிநடாத்தி அஸ்ஸாலிஹாத் மதரசாவை பொது இடமாக எடுத்தால் என்ன? தனிநபர் வருமானம் ஈட்டிக் கொள்வதை விட அதை பொது இடமாக எடுத்து சபையின் கீழ் உள்வாங்கி இவ்வாறான ஒரு கூடம் அமைப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அது அரச காணி. அந்த காரணங்களுக்காக ஒதுக்கப்பட்டு, ஒரு நிர்வாக சபை நடத்துகின்றது. மார்க்கம் சம்மந்தமான விடயம் என்பதால் நம்பிக்கையாளர் சபையிடம் விடுவதுதான் சிறந்தது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் கூறியது போல அந்த மதரசாவுக்கு தனிநபர் ஒரு காணியை கொடுத்தவுடன் அதை விற்பதற்கு ஒருவர் முயற்சி செய்தார். காணிக்காரவர் அப்படி செய்ய இயலாது. இது நிரந்தரமான சொத்து. மரைக்கார் சபை ஊரால் தெரிவு செய்யப்படுபவர்கள். எங்களுக்கு கீழ்தான் மரைக்கார் சபையும், உலமா சபையும் இருக்க வேண்டும். ஆலோசனைகள்தான் அவர்கள் வழங்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்களின் தலைமையில் அந்தக் குளத்தை மூடினோம். அதற்கு பேமிட் எடுப்பதற்கு பெண்கள் மதரசா மன்சூர் DS அவர்கள் இருந்த காலத்தில் மர்ஹூம் மஜீட் Engineer இன் காலத்தில் செய்து அதில் நாம் தலையிட்டு நீர்ப்பாசன திணைக்களத்திடம் இருந்து அதை பாரம் எடுத்து விட்டோம். என்னைப் பொருத்தமட்டில் பெண்கள் மதரசாவில் நான் பெரிது படுத்துவதில்லை ஏனென்றால் அது தனியார் நிறுவனம். வக்ப் பண்ணின சொத்துகளுக்கு உதவுவது வேறு விடயம். இது தனியார் கல்வி நிறுவனம். நீங்கள் சொல்வது போல் ஆயிஷா சித்தீக்கா போன்ற அளவுக்கு அவர்கள் வரவில்லை. அந்த அளவுக்குரிய போதனாசிரியர்கள் நமது பகுதியில் இல்லை.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, போதானாசிரியர்கள் இருக்கின்றார்கள். நான் அண்மையில் இது சம்மந்தமாக பேசிய போது எங்களுக்கு தனியாக நடத்துவதனால் போதனாசிரியர்களுக்கு கொடுப்பதற்குரிய வருமானம் போதாது என்று கூறுகின்றார்கள். போதனாசிரியர்கள் இருக்கின்றார்கள் அதை பயன்படுத்துகின்றார்கள் இல்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அப்படியானால் குழு ஒன்று அமைத்து நம்பிக்கையாளர் சபையிடம் கதைப்போம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறியது போன்று சம்மாந்துறையில் மதரசாக்கள் இயங்கிக் கொண்டு வருகின்றது. ஆனால் ஏன் மக்கள் அங்கு செல்லவில்லை என்றால் உலகக் கல்வி இல்லை என்று, வெளியிடத்தில் செல்வது உலகக் கல்வி இருப்பதனால். 2019 ஆம் ஆண்டு பெண்கள் மதரசா, பெரியபள்ளி மதரசா நிர்வாகத்தரிடம் கதைத்த போது நான் ஒரு விளக்கம் சொன்னேன். பிள்ளைகள் சாதாரணதரப் பரீட்சையில் சித்திபெற்றாலும் சரி, சித்திபெறாவிட்டாலும் Open University இருக்கின்றது. அதில் தரம் 09, தரம் 10 படித்தால் ஆரம்பத்தில் இருந்து பட்டதாரி வரைக்கும் அந்தக் கல்வியை கொண்டு போகலாம். இதை கொழும்பிலும் கதைத்து அவர்களிடம் சலுகை எடுத்து இங்கு இவர்களிடம் கதைத்தால் உலகக் கல்விக்கு நாங்கள் இடம் வைக்கவில்லை. மார்க்கக் கல்விக்குதான் இடம் வைத்திருக்கின்றோம் என்று சொன்னார்கள். இது விளக்கமாக உஸ்வா மத்ரசாவிலும் கதைத்தோம். அவர்கள் தற்போது அல் மர்ஜான் பாடசாலையினையும் இணைத்திருக்கின்றார்கள் என்று நினைக்கின்றேன். ஆகவே நாங்கள் இந்த உயர் சபையில் இருக்கின்றதற்கு இணங்க மதரசாக்களுக்கு ஒரு குழு கூடி உலகக் கல்வியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறி இந்த சம்மாந்துறையை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மிகவும் காத்திரமான பல அரிய கருத்துக்களை கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறியிருக்கின்றார். வரவேற்கத்தக்க ஒன்று இந்த சபையை பொருத்தவரையில் கட்சி பேதம் இல்லாமல் ஒற்றுமையாக நாங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றோம். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எங்களது பதவிக் காலம் நீடிக்கப்பட்டது எங்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம். இந்தக் காலத்திலையாவது சம்மாந்துறை அபிவிருத்தி சம்மந்தமான பெருந் திட்டத்தினை தயாரிக்க வேண்டும். நாம் மாத்திரம் இல்லாமல் சபைக்கு வெளியில் இருக்கின்ற துறைசார்ந்தவர்களையும் எடுத்து சம்மாந்துறையின் அபிவிருத்தி அடுத்த 10 வருடம் அல்லது அடுத்த 20 வருடத்தில் எப்படி என்று எடுத்தால் இதற்கு பின்னர் பாராளுமன்ற உறுப்பினரோ அல்லது மாகாண சபை உறுப்பினரோ அல்லது இது போன்ற பிரச்சினை இல்லாத சபை உருவாகும் என்றால் அவர்களிடம் இந்த திட்டத்தினை கொடுத்து, இந்த திட்டத்தில் நீங்கள் பயனித்தீர்கள் என்றால் பிரயோசனமாக இருக்கும் என்று கூறலாம்.

தற்போது எல்லா வளங்களும் எமது ஊரில் இருக்கின்றது. ஆனால் நாங்கள் வெளியூரில் கையேந்தி நிற்கின்றோம். கிடைத்த பிரதிநிதித்துவத்தை தட்டிவிட்டு, ஒரு கடிதம் பாராளுமன்ற உறுப்பினரிடம் எடுக்க வேண்டும் என்றாலும் வெளியூரில் கையேந்த வேண்டி இருக்கின்றது. ஆனால் ஒரு காலம் இருந்தது வெளியூர் ஆட்கள் இங்கு வந்து உதவிகள் பெற்றது. எனவே இதை நிதானமாக சிந்தித்து அரசியல் வேறுபாடுகள் இல்லாமல் காழ்புணர்வுகள் இல்லாமல் ஊரை முன்னிலைப்படுத்தி ஊரின் அபிவிருத்தி எப்படி இருக்க வேண்டும் என்று நாம் எவ்வளவு கனவு காண இயலுமோ அந்தக் கனவுகள் அத்தனையையும் அந்த திட்டத்தில் போட்டால் அந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நிதிகளை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்பது தான் நமது முயற்சியாக இருக்க வேண்டுமே தவிர எங்களுக்குள் முட்டி மோதி ஒருவரும் இல்லாமல் வெளியூர் மக்களிடம் கையேந்துவதை விட்டுவிட்டு நாம் பிறந்த மண் இன மத பேதம் இல்லாமல் ஒற்றுமையாக வாழ்ந்த மண்.

வெளியூர்களில் இனக்கலவரம் நடந்த நேரம் சம்மாந்துறையில் கலவரம் நடக்காமல் இருந்ததற்கு காரணம் அந்த நேரம் இருந்த பாராளுமன்ற பிரதிநிதி எல்லா இன மக்களையும் ஒன்றாக அரவணைத்து பழகியதனால் தான் சம்மாந்துறை எடுத்துக்காட்டாக இருக்கின்றது. தற்போது வெளியூரைத்தான் முன்னுதாரணமாக காட்டுகின்றோம். ஏன் கிழக்கு மாகாணத்தில் மிகவும் பெரிய ஒரு கிராமம் இது. இந்த கிராமத்தை ஏன் வளப்படுத்த இயலாது. என்ன வளம் இல்லை. இருக்கின்ற வளத்தைகூட சரியாக வளப்படுத்திக் கொள்ள முடியாமல் இருக்கின்றது. எனவே அபிவிருத்தித்

திட்டம் ஒன்றை தயாரிக்கக்கூடிய துறைசார்ந்த ஆட்களை அணுகி சபையால் செலவளிக்க வந்தாலும் பரவாயில்லை ஒரு திட்டத்தை தயாரிப்போம். அதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டும். அடுத்ததாக வெளிநாட்டில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. நான் சொன்னேன் சபைக் கூட்டத்தில் இருக்கின்றேன் பிறகு எடுக்கின்றேன் என்று, சபையில் சொல்லுங்கள் கட்டாக்காலி மாடுகளைப்பற்றி, அண்மையில் கூட ஒரு விபத்து இடம்பெற்றது. இதை கட்டுப்படுத்துவதில் முயற்சி செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இந்த விடயத்தில் நமது சபை முயற்சி எடுக்கவில்லை என்று இல்லை. அதிகளவான முயற்சிகள் எடுத்தும் இந்த ஊரில் நான் கண்ட அனுபவம் கூட்டு முயற்சி என்று வருகின்ற நேரம் பங்களிப்பு செய்வது ஆகக்குறைவு. SWDC இந்த ஊரில் நிறைய அனுபவம் வாய்ந்த கல்விமான்கள், நிபுணர்கள் இருக்கின்ற சபை. சென்ற கிழமைகூட சொன்னேன் நீங்களும் சமூக சேவைதான் செய்து வருகின்றீர்கள். அதற்கு அப்பால் செல்ல வேண்டும். கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களும், கௌரவ உப தவிசாளர் அவர்களும் சொன்ன கருத்துகள் எல்லா வளங்களும் இருக்கின்றது. உப வேந்தர்நியமிக்கப்பட்ட நேரம் கூட நான் சொன்னேன். சம்மாந்துறையில், ஒலுவிலில் இருக்கின்ற பல்கலைக்கழகத்தால் சமூகம் கண்ட நோக்கம் என்ன? பங்களிப்பு இல்லை. நிச்சயமாக இந்த Master Plan என்பது செய்யப்பட வேண்டிய ஒன்று. SWDC ஆரம்பித்தார்கள் தற்போது விட்டுவிட்டார்கள். இந்த மாதத்தின் கடைசி கிழமை ஆலோசனைக் குழுவையும் சேர்த்து செய்வோம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, மலையடிக்கிராமம் - 04 இல் அமைந்துள்ள சந்தைக்கு வெளியில் பாதையில் விற்கின்ற மீன், மரக்கறி எல்லாவற்றையும் சந்தைக்குள் விற்பனை செய்தால் நல்லது என்று நினைக்கின்றேன். போக்குவரத்து செய்வதற்கு மக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். அந்த இடத்தில் விபத்துக்கள் மட்டுமல்ல பெண்களுக்கும் இறைச்சிக் கடைகளுக்கு செல்வதற்கு இலகுவாக இருக்கும்.

அத்தோடு 2022.03.11 ஆந் திகதி ஒரு குழுக் கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. அதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களும் கலந்து கொண்டார். உறுப்பினர்களுக்கு கிடைத்த 40 இலட்சம் சம்மந்தமாக விரிவான விளக்கம் ஒன்று கிடைக்கப்பெற்றது. இது உறுப்பினர்கள் ஊடாகத்தான் அவர்கள் கொடுக்கும் வாழ்வாதார ஆட்களை வைத்துதான் செய்ய வேண்டும் என்ற ஆதாரத்தோடு எங்களது சுற்றறிக்கையில் நியமிக்க சொல்லியிருக்கின்றது. அந்த உறுப்பினர்கள் ஊடாக வாழ்வாதாரம் வழங்கப்பட வேண்டும். அவர்கள் குறிப்பிட்ட ஆட்களுக்குத்தான் வழங்கப்பட வேண்டும் என்ற உத்தேசமான சுற்றறிக்கை இருக்கின்றது.

அது இருக்கத்தக்கதாக, இது வேறு விதமாக பிரதேச செயலகம் ஊடாக சுற்றறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அவர்கள் நினைத்தவர்களுக்கு கொடுக்கின்றார்கள். உண்மையாக கவலைக்கிடமான விடயம். இந்த சபையில் செயலாளர் முன்னிலையில் விளினியடி 03 இல் இருக்கின்ற EDO என்னுடன் பேசிக்கொண்ட விதம் மிகவும் வேதனையாக இருந்தது. மிகவும் கீழ்த்தரமான முறையில் பேசியது மிகவும் மனவருத்தமாக இருந்தது. இது கௌரவ உறுப்பினர் என்ற பெயருக்கு கிடைக்கின்ற அவமானமா? அல்லது வெகுமானமா? இதை எந்த வகையில் எடுப்பது. எந்த விடயம் செய்வது என்றாலும் பிரதேச செயலாளருடன் அணுகுமுறையை கொண்டுவரும் போது எல்லா உறுப்பினர்களையும் உள்வாங்க வேண்டும். இது சம்மந்தமான சுற்றறிக்கையுடன் எங்கு எங்கு கடிதம் அனுப்ப வேண்டும் என்பதையும் சொல்வதற்கு இருக்கின்றேன். இது கௌரவ உறுப்பினர்களுக்கு வந்த 40 இலட்சம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நான் உங்களிடம் வாசித்து காட்டினேன். அந்த சுற்றறிக்கையில் இல்லை.

கட்டாக்காலி மாடுகள் தொடர்பாக, நாம் ஒரு தடவை பிடித்து அடைத்து அதில் பிரச்சினை. நாங்கள் பொலீசாரின் உதவியை நாடி அறிவித்தல் செய்தோம் பிடிபடுகின்ற மாடுகளை நீதிமன்றத்திற்கு

பாரப்படுத்த வேண்டும் என்று, அங்கு ஒரு பிரச்சினை அவர்கள் பாரம் எடுத்தால் பராமரிக்க வேண்டும் என்று அவர்களும் எடுப்பதற்கு தயார் இல்லை. எமது ஊரில் பிரச்சினை இந்த மாடுகள் யாருடையது என்று தெரியாது. அந்தந்த பகுதி மக்களிடம் நான் சொல்வது யாருடைய மாடு என்று இனங்கண்டு தாங்கள் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என்று, ஆனால் காட்டித்தருவதற்கு ஒருவரும் இல்லை. நாம் மீண்டும் பிடித்து அடைத்து நீதிமன்றத்திற்கு பாரம் கொடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கட்டாக்காலி மாடுகள் எங்களால் பிடிபடுகின்ற நேரம் உரியவர்கள் தெரியமாட்டார்கள். ஆகவே நாம் ஒரு முன்னறிவித்தல் விடலாம் இவ்வாறு பிடிபடுகின்ற மாடுகள் ஏலம் விடப்படும் அல்லது அரச உடமையாக்கப்படும் என்ற தகவலை கொடுப்போம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அது எமது சட்டத்திற்குள் செய்ய இயலாது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தைக்காப்பள்ளி தெற்கு வீதியில் நிர்மாணம் தற்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நேற்றும் ஒரு முறைப்பாடு வந்தது. இன்று காலையிலும் கௌரவ உறுப்பினர் சரீபா அவர்களும் கூறினார்கள். நேற்று அந்த முறைப்பாடு வந்தவுடன் முனவ்வர் TO உம், LGA உம் அவ்விடத்தில் சென்று பார்த்தார்கள். பொருட்களை கொட்டி வைத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்து நில அளவை திணைக்களத்திற்கு கொடுத்திருக்கின்றோம். அந்த உறுதியில் உள்ள காணியை இனங்காணச்சொல்லி, அதில் வருகின்ற விளைவுகள் அவர்களுக்கு தெரியும். Surveyor முடிந்து 2,3 நாளைக்குள் Report வரும். அதற்கு பின்னர் பாதை இருக்கின்றதா? இல்லையா எப்படி அது விடப்பட்டது என்ற சரித்திரம் வரும். அதற்கு பின்னர் அவர்கள் ஒன்றும் செய்ய இயலாது. நான் தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் சொன்னேன் அவர்கள் நிர்மாணம் செய்தால் பொலீஸையும் கூட்டிச் செல்லுங்கள் என்று, நாம் எது செய்தாலும் சட்டரீதியாக செய்ய வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகள் சம்பூரணமாக நடைபெறுகின்றது. சட்டரீதியாக அதற்கு முடிவு காண்போம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது கிட்டத்தட்ட 30 குடும்பங்கள் சம்மந்தப்பட்ட விடயம். பொது மக்களின் நலனை முன்நிறுத்தி அந்தப் பாதையை பழைய படத்தில் எல்லாம் இருந்தாலும் பொது பாதையாக பயனிப்பதற்கு ஒரு ஏற்பாட்டை இந்த சபை ஏகமனதாக செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் கே.குலமணி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வீதி லாம்புகள் சம்மந்தமாக வளத்தாப்பிட்டி கிராமத்தில் நடைமுறையில் இருக்கின்ற முக்கியமான பிரச்சினை யானைப்பிரச்சினை. தற்போது களவு வேலைகள் நடக்கின்றது. சில இடங்களில் தான் CCTV Camera பொருத்தப்பட்டிருக்கின்றது. மின் துண்டிப்பு நேரங்களில் இலகுவாக களவு எடுக்கக்கூடிய மாதிரி இருக்கின்றது. அடுத்தது யானைகள் வருகின்ற முக்கியமான வழிகளில் மாத்திரமாவது வீதி லாம்புகளை பாவிக்கக்கூடியதாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

தொல்பொருள் ஆராய்ச்சி நிலையம் சம்மந்தாமக கூறினீர்கள். அதில் முக்கியமான விடயம் என்னவென்றால் பிக்குகள் அந்த இடத்தில் கட்டடம் கட்ட வேண்டும் என்று அடிக்கடி வந்து பார்த்துவிட்டு செல்கின்றார்கள். சென்ற மாதமும் வந்து பார்த்துவிட்டு சென்றார்கள். அவர்கள் அங்கு வருவதை சபைக்கு அறிவித்துவிட்டு வந்தார்கள் என்றால் நமக்கு தெரிய வரும் இவர்கள் வருகின்றார்கள் என்று, தெரியாமல் வருவதனால்தான் அங்கு யார் வருகின்றார்கள் என்ன செய்கின்றார்கள் என்று தெரியாமல் இருக்கின்றது. மக்கள் எந்த நேரமும் அதில் கண்காணிப்பாக

இருக்கமாட்டார்கள். யதார்த்தமாக கண்டால்தான் யாரோ வந்திருக்கின்றார்கள் என்று தெரியும். இங்கு அறிவித்து விட்டு வந்தால் யார் வருகின்றார்கள் என்று தெரிய வரும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
யானைக்கும் வெளிச்சத்திற்கும் உண்மையாக தொடர்பு இல்லை. சில இடங்களில் வெளிச்சம் போடுவதைப் பற்றி CEB யிடம் கேட்க வேண்டும். அதை கேட்டுவிட்டு செய்வோம்.

தொல்பொருள் தொடர்பாக பேசியதற்கு காரணம் தற்போது இருக்கின்ற நடைமுறைக்கு உள்ளூராட்சிக்கும் அதற்கும் ஒரு தொடர்பும் இல்லை. அரச காணி அதை அறிவிக்க வேண்டியது பிரதேச செயலாளர். நாம் என்ன செய்யலாம் என்றால் பிறர் யாராவது வந்து ஏதாவது முயற்சி எடுக்கின்றார்கள் என்றால் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் சமாதானத்திற்கு பங்கம் விளைவிக்கும் செயலாக கருதுகின்றேன் என்று பொலிஸ் இல் ஒரு முறைப்பாடு செய்தவுடன் அவர்களுக்கு விளங்கும் இவர்கள் கவனமாக இருக்கின்றார்கள் என்று தெரிய வரும். இத்துடன் சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை